கிருஷ்ண பிக்சர்ஸ்
கிருஷ்ணபக்தி
டைரக்ஷன்:
R. S. மணி
ஸ்டுடியோ
நியூடோன்

நடிகர்கள்

P. U. சின்னப்பா	அரசகுரு
N. S. கிருஷ்ணன்	வேவுகாரர்
K. R. ராமசாமி	கிருஷ்ணபரமாத்மா
சிதம்பரம் ஜெயராமன்	நாரதர் & சாது
புளிமூட்டைராமசாமி	விதூஷகன்
D. பாலசுப்ரமணியம்	அரசன், ராஜசிம்மன்
ஆழ்வார்குப்புசாமி	அரசகுரு பிரதமசீடர்
குளத்துமணி	ஆஷாடபூதி
C. S. பாண்டியன்	மாமா
T. V. நமசிவாயம்	அரசகுரு சீடர்
K. R. செல்லமுத்து	அரசகுரு சீடர்
E. கிருஷ்ணமூர்த்தி	பண்டாரம்
S. V. S. நாராயணன்	மிருதங்க வித்வான்
M. துரைசிங்கம்	மந்திரிகள்
S. V. ராஜகோபால்	மந்திரிகள்
T. V. சிவானந்தம்	மந்திரிகள்
சந்திரசேகரன்	மந்திரிகள்
S. ராமனுதன்	மந்திரிகள்
T. V. ராதாகிருஷ்ணன்	அரண்மனை உத்தியோகஸ்தர்
V. ஸ்ரீனிவாஸராவ்	மிருதங்கம் வாசிப்போன்
C. P. வெங்கடேஸ்வரன்	குழலோன்
திருப்பதி	கோவில் பண்டாரம்
S. S. மணி	பக்தன்
A. K. காளீஸ்வரன்	மந்திரி

மற்றும் பலர்.

நடிகையர்

T. R. ராஜகுமாரி	...	அரண்மனை தாசி தேவகுமாரி.
T. A. மதுரம்	...	வேவுகாரர் மனைவி
S. P. L. தனலெக்ஷ்மி	...	ராஜகுருவின் மனைவி வசுமதி
P. A. பெரியநாயகி	...	பாமா
A. R. சகுந்தலா	...	ருக்மணி
C. T. ராஜகாந்தம்	...	தாய்க்கிழவி ராகமஞ்சரி
M. L. வஸந்தகுமாரி	...	பாடகி
குமாரி. N. ராஜம்	...	மிருதங்கம்
C. V. தனலெக்ஷ்மி	...	யாழ்
T. D. குசலகுமாரி P. பத்மா	...	நடனமாதர்கள்
K. S. லெக்ஷ்மி,	...	கீதம் பாடுபவர்
M. K. சரோஜா C. R. ராஜகுமாரி	...	தில்லானா நடனம்
K. S. ராஜம் K. S. சந்திரா குமாரி வனஜா R. சரஸ்வதி S. ராஜேஸ்வரி S. பத்மா	...	நடனமாதர்கள்
குமாரி சீதா	...	பிச்சைக்காரப்பெண்

மற்றும் பலர்.

கிருஷ்ணா பிக்சர்ஸ் தயாரித்த

"கிருஷ்ண பக்தி"

வசனம்	...	S. D. S. யோகி, சுத்தானந்த பாரதி, 'சாண்டில்யன்', கு. ப. சேது அம்மாள்.
பாடல்கள்	...	உடுமலை நாராயண கவி.
சங்கீதம்		S. V. வெங்கட்டராமன். குன்னக்குடி வெங்கட்டராமய்யர்
நடனம்	...	வழுவூர் V.B. ராமையா பிள்ளை.
வாத்ய கோஷ்டி	...	கிருஷ்ணா பிக்சர்ஸ் ஆர்செஸ்ட்ரா.
படப்பிடிப்பு (நிர்வாகம்)	...	ஜித்தன் பனர்ஜி.
படப்பிடிப்பு	...	V. குமாரதேவன்.
ஒலிப்பதிவு (நிர்வாகம்)	...	டின்ஷா K. தெஹ்ரானி.
ஒலிப்பதிவு	...	மீனாக்ஷி சுந்திரம்.
செட்டிங்ஸ் (நிர்வாகம்)	...	F. நாகூர்.
செட்டிங்ஸ்	...	செல்லம் மேஸ்திரி, பாபு.
மேக்கப்	...	ஹரிபாத சந்திரபாபு, A. V. ராமசந்திரன், D. தனக்கோட்டி.
உடையலங்காரம்	...	M. நடேசன்.
,, (உதவி)	...	C. K. கண்ணன், M. கோவிந்தராஜ்.
எடிட்டிங்	...	P. S. வின்ப்ரெட்.
உதவி டைரக்ஷன்	...	S. ராமநாதன், S. K. மூர்த்தி, T. S. C. சேகர்.
ஸ்டுடியோ	...	நியூடோன்
கதை & டைரக்ஷன்	...	R. S. மணி

கிருஷ்ண பக்தி கதைச் சுருக்கம்

துவாரகையில் **ஸ்ரீ கிருஷ்ண பகவான்** ஸத்ய பாமையிடம் சொல்கிறார்: "**பாமா!** உயர்குலத்தவன், கீழ்குலத்தவன் என்ற வித்தியாசம் எனக்குக் கிடையாது. படித்தவன், படிக்காதவன், என்ற வித்தியாசங்களையும் நான் கவனிப்பதில்லை. எவன் காம, குரோத, லோப, மத, மாத்ஸரியங்களை ஜெயித்து அந்தரங்க சுத்தியுடன் என்னை நினைக்கிறானோ, அவனே என் பக்தன். இத்தகைய நிச்சலமான பக்தியின்றி வெளிவேஷம் போடுபவர்களும், பணத்திமிரும், பட்டப்பெருமையும், காம இச்சையும் கொண்டு ஊரை ஏமாற்றுபவர்களும் என்னை என்றும் காண்பதில்லை. அவர்கள் வினையும், தீய செயல்களும் அவர்களையே சுட்டெரித்து விடுகிறது. செய்த தீவினைகளுக்கு வருந்தி, திருந்தி, சர்வத்தையும் எனக்கு அர்ப்பணம் செய்பவனுக்கே என் அருள்கிட்டும். இது ஸத்தியம். சந்தேகம் வேண்டாம்."

இந்த அருள் வாக்கின் உண்மையை விவரிப்பது தான் '**கிருஷ்ண பக்தி**'யின் கதை.

* * * *

ராஜசிம்ஹன் என்ற அரசனின் குரு, பெரிய கபடன், நய வஞ்சகன். வெளி வேஷம் போட்டு வேதாந்தம் பேசி ஊரை ஏமாற்றி உள்ளூர கேவல இச்சைகளைக் கொண்டவனாய்க் கண்ட பெண்களைப் பெண்டாள இழுத்து ருத்திராக்ஷப் பூனையாக காலங்கழித்து வருகிறான். அரசனும் ஜனங்களும் அவன் சொல்லை வேத வாக்காக மதித்து அவனைப் பணிந்து போற்றுகிறார்கள்.

இத்தகைய கபடன் முன்னிலையிலும், அரசன் முன்னிலையிலும், தேவகுமாரி என்ற தாசிப் பெண்ணின் நாட்டிய மொன்று கோவிலில் நடக்கிறது. சேற்றில் செந்தாமரை முளைத்ததுபோல், நல்ல அழகுடனும், உயர்ந்த நோக்கங்களுடனும் தாசி குலத்தில் பிறந்த தேவகுமாரியின் அழகையும், ஆட்டத்தையும் கண்டு அரசனும் ராஜகுருவும், அவள் மேல்

ஆசை கொள்ளுகிறார்கள். அரசன் அவளைத் தனது ராஜநர்த்தகியாக நியமிக்கிறான். அவள் ஆசையை தன்னிடம் திருப்ப "தேவ குமாரி! நீ இனி தெய்வத்தின் பத்தினி; பாகவதர்களுக்குத் தொண்டு செய்து அதன் மூலம் கண்ணன் திருவடியை அடைய பாடுபடு" என்று குரு உபதேசிக்கிறார்.

ராஜகுரு சுயநலத்துடன் சொன்ன இவ்வார்த்தைகள் தேவகுமாரியின் மனதில் ஆழப்பதிந்து விடுகின்றன. அதன் படியே நடந்து பிறவிப்பயனை அடையத் தீர்மானித்து விடுகிறாள்.

தேவகுமாரியின் அழகில் லயித்துப்போன அரசன் ராஜ சிம்மன் அவளைத் தன்னிடம் சேர்க்கும்படி விதூஷகனிடம் சொல்லி அதற்குத் தேவையான வெகுமதிகளையும் கொடுத்தனுப்புகிறான். வெகுமதிகளுடன் தாசி வீடு வந்த விதூஷகனை தாய்க் கிழவியும், மாமாவும், உபசரித்து எப்படியாவது தேவ குமாரியை அன்றிரவு கோவிலிலிருந்து அரண்மனைக்கு அனுப்பி விடுவதாக உறுதி கூறுகிறார்கள்.

தேவகுமாரியைக் கைப்பற்ற அரசனும், விதூஷகனும், பேசியதைக் கோவில் தூணில் மறைந்திருந்து கேட்ட ராஜகுருவின் சிஷ்யன் ஆழ்வார், குருவிடம் விஷயத்தைச் சொல்லுகிறான். தேவகுமாரியின் மனதைக் கலைத்துவிட குருவும், சிஷ்யனும், ஒரு ஏற்பாடு செய்கிறார்கள்.

அன்றிரவு தேவகுமாரி கோவிலுக்குப் போகும் சமயத்தில் ராஜகுருவின் ஹரிகதா காலக்ஷேபம் அங்கு நடந்து கொண்டிருக்கிறது. அன்று ராஜகுரு கற்பைப் பற்றிப் பிரமாதமாக ஜனங்களுக்கு உபதேசிக்கிறார். இந்த சமயத்தில் தேவகுமாரி கோவிலுக்கு வருவதைப் பார்த்த ஆழ்வார் கதை கேட்கும் கும்பலுக்குள் வந்து நுழைந்து கொண்டு "கற்பு என்பது குல மாதருக்குத் தான். விலைமகளின் கதி என்ன?" என்று கேட்கிறான்.

விலைமகள் என்பது காமுகர்கள் அளித்த பெயரென்றும், உண்மையில் தாஸியாயிருப்பவள் ஒருவனை மணம் செய்து

கொண்டுதான வாழ வேண்டுமென்றும், மணம் செய்துகொள்ள இஷ்டப்படாதவன் அரசனுயிருந்தாலும் அவள் காதலிக்க சம்மதிக்க மாட்டாளென்றும் ராஜகுரு உபதேசிக்கிருர்.

இதனுல் இன்னும் உறுதிப்பட்ட மனதுடன் அரசனில்லம் சென்ற தேவகுமாரி, அரசன் காம இச்சைக்கு உடன்படாமல் தன்னை மணம் செய்து கொள்ளும்படி கேட்கிருள். அரசன் மறுக்கவே அரண்மனையைவிட்டு ஓடிவந்து விடுகிருள். இதை யறிந்த தாய்க் கிழவியும், மாமனும், அரசாக்கினைக்குப் பயப் பட்டு, அவள் மனதைத் திருப்பப் பெரிதும் முயலுகிருர்கள்.

தேவகுமாரி, இந்த வற்புறுத்தலுக்கு உடன்படாமல் ராஜகுருவை நாடி, தனக்கு தர்மோபதேசம் செய்யும்படி கேட்கிருள். தன் வீட்டிற்கு அதிதி சத்காரத்துக்கு வரும்படியும் அழைக்கிருள். ராஜகுரு, அப்படியே சென்றதுமன்றி, அரசனுக் காகவே அவளில்லம் சென்றதாக நடித்துத் தன் வீட்டுக்கு தேவ குமாரியை வரவழைத்து அவள் கற்பை கெடுக்க முயலுகிருன். அதற்கிடைஞ்சலாயிருந்த அவன் மனைவியின் கதியும் அதோ கதியாகிறது.

தேவகுமாரியிடம் ராஜகுருவின் சேஷ்டைகள் பலிக்க வில்லை. அவளை பலாத்காரம் செய்ய முயலுகிருன். அவள் கிருஷ்ணனைக் கூவியழைத்து தரையில் சாய்கிருள்.

அந்தத் தருணத்தில் ராஜகுரு தன் வாழ்வின் பெரும் படிப்பினையைத் தெரிந்து கொள்கிருன். தேவகுமாரியின் கற்பின் சக்திக்கெதிரில் தன் துன்மார்க்கம் தலை தூக்க முடியாமல் தன்னையே சுட்டெரிப்பதை உணர்கிருன். அந்த இரவில் ஏற்பட்ட அனு பவத்தின் பயனுக அவனுக்கு உண்மை விளங்கி, அவன் வாழ்க்கை வேறு பாதையில் திரும்பிவிடுகிறது. வீடு வாசலைத் துறந்து பரதேசியாக அலைய ஆரம்பிக்கிருன். ஆனுல் அவன் முன் செய்த தீவினைகள் அவனை சுட ஆரம்பிக்கின்றன. மனைவியின் கொலைக் குற்றம் முதலியவற்றை சுமத்தி அரசன் ராஜகுருவை தூக்கு மேடைக்கு அனுப்பிவிடுகிருன்.

பிறகு நடந்தது என்ன? ராஜகுருவுக்கு விமோசனமுண்டா? அரசன் விரும்பிய தேவகுமாரியின் கதியென்ன? என்ற விபரங் களைத் திரையில் காணுங்கள்.

KRISHNA BHAKTHI

SYNOPSIS

Said Lord Krishna to Sathyabhama: "It matters not to me whether one is low-born or high born, nor is it of importance whether one is well versed in all arts or not; I like the one who, having got under control all that is evil in man, thinks of me alone. He, who gives way to the forces of evil, spends his life in the pursuit of women and wealth, he who deceives the world by force of words or swords, never deceives me nor can he at any time hopes to reach me. Salvation lies to him who repents and who in his repentance, realises in me the eternal bliss."

The story of "Krishna Bhakthi" simply illustrates these divine sentiments. It is the story of a consummate villain who by dint of his learning, eloquence and airs, led the world into the belief that he was a great devotee, while in secret he pursued the pleasures of the flesh. His airs were of such an order that even Rajasimha, the King of the realm, was duped by him. He was the King's preceptor, to whom the world bent in obedience, awe and respect.

To dance before this Rajaguru and his benefactor, the King, came a rare type of dancing girl as great in her talents and outlook as she was beautiful.

Both the King and the villain Rajaguru were so much struck with the beauty of the dancing girl that, while one made her, the Rajanarthaki of his realm, the other spoke words of wisdom in her ears. Said the cunning Rajaguru: "My girl! Realise your innerself. From today, you are the consort of God. Worldly pleasures of a low nature are not for you. Follow the footsteps of His Bhakthas and that will lead you to the real goal".

These words having made a strong impression in the mind of Devakumari, she refused to give her ears to her mother and *Mama* who dangled before her the fortunes that await, if only she listened to wiser counsels. The King, who

had fallen head over heels in love with the dancer, sends his court-fool with presents and with an order that Devakumari should call at the palace that night. The mother and *Mama* accept the presents as well as the proposal with Joy.

The Rajaguru, who comes to know of the arrangement, makes his plans to foil the attempt of the King. He arranges a Harikatha kalakshepam, and times his lecture on "Devadasis," to coincide with the arrival of Devakumari in the temple. He lectures as to how every Dasi should hold her chastity dear and how she should refuse to be ravished even by the mightiest King on earth. 'Marriage is the only bond into which a Dasi can enter!', he advised.

These words further strengthened Devakumari in her resolve to lead a chaste life and as a result, she rejects the King's offer to be his concubine. She even goes to the length of approaching the Rajaguru for instruction into the regions of Vedanta. Her periodical visits to Rajaguru's house to get instruction, arouses the suspicion of the King.

In the meantime, the Rajaguru, whose passion for Devakumari has gone to such a pitch that on one night he gets rid of his own wife who was an impediment to his pleasure, and also actually bullies Devakumari to untold extents. Devakumari, finding that she is fully trapped, surrenders herself to God and falls down unconscious. Rajaguru, then to his astonishment and agony, finds the force of the chastity of the dancing girl to be more than a match to his villainy and as a result of that experience, realisation comes to him. He gives up his house, wealth and all worldly possessions, becomes a mendicant and wanders about.

In the meanwhile information regarding the disappearance of his wife, leaks out and the King orders his arrest, tries him and sends him to the scaffold.

What is the final phase of Rajaguru's life ?..................

What became of the dancing girl, Devakumari?...........

See for yourself on the Silver Screen !

கிருஷ்ணபக்தி பாட்டுகள்

(1) சத்ய பாமா

பூமியின் மேலே சத்திய
பாமை என் போலே யாருமில்லை (பூமி)

காமனைத் தந்த கடவுளாகிய
கண்ணனென் கைவசந்தான் அவர்புவி
காப்பதென் சொற்படிதான் நிஜந்தான் (பூமி)

தேவர் முனிவர் யாவரும் இங்கு
தேடியே வருவார் கைகட்டி
சேவை செய்திடுவார்-துதிப்பார் (பூமி)

தேமலர்கொண்டு சாமிபூஜையை
செய்யடி யென்சேடி-பூஜை
செய்யடி யென்சேடி நைவேத்தியம்
தேவிக்குக் கொண்டாடி போடிப் போடி (பூமி)

(2) சத்ய பாமா

தாமரைச் செங்கண் வதனு ச்யாமள வர்ணு (தா)
ஸ்வாமி உங்களைப்போலே
சமர்த்தருண்டோ மண்மேலே
காமியர் காணேன் கண்ணாலே
காருண்ய மாலே நிஷ்காமியர் (தா)

துடைதனைக் கிள்ளிவிட்டு
தொட்டிலை ஆட்டுதல்போல்
எடையிட்டுப் பக்தி நிறுத்தீர்
என்னை சோதித்தீர் (தா)

ஓலமிட்ட த்ரௌபதை
உத்தமி மானம் காக்க
சேலைகொடுத்த சீமானே
எந்தன் பூமானே (தா)

(3) கோரஸ் :

ஜெய ஜெய ஸ்ரீ ஜெகன்மோகனனே வசு
தேவ பால ராஜ யதுகுல வரத (ஜெ)

சங்குசக்ர கிரிதரா சுபகரா
சர்வ ஜீவ கருணா சாகரா
மங்களாகரா சுந்தரா
மதுர முரளீதரா வசீகரா அருள் (ஜெ)

(4) தேவ குமாரி — பியாகடை-ஆதி.

கண்ணகி புகழ் .R S. மணி
கிருஷ்ண பக்தி இவரது அரிய
தயாரிப்பாகும்

வி
(மா)
லவி
ளும்
ன
ட (மா)
த்யம்
பார்
ட
ா
ங்கழகாம்
ரீதி
தேன்
மனநேச விசுவாச துரை நீ
நினையல தெவர் துணை நிச (மா)

(5) ராஜ குரு — மோகனம்.

க்ருஷ்ணா ஹரி கோவிந்தமுராரி
கேசவா கிரிதாரி
ர்வலோக சமுசாரி
தர்ம ஞான சுகவாரி (க்ரு)

(6) ராஜ குரு — கமாஸ்.

பூவையார் கற்பின் பெருமை
புகலத்தரமோ—வளர்— (பூ)

பாவை அகலிகை பாஞ்சாலி அமாகுரு
பாரியென மொழியும் தாரையுடனே சீதா
தேவி நளாயினியாம் (பூ)

சீரார் சுடர்தனைப் பார்மீது உதயமதே
செயவிடா திறமைதான் நிறையுளார் மகிமையே
தினமும் வானின் மழையை வாயில்
பொழியென்றாலும் பொழியலாகும்
திகழும் தனது பதியின் உயிரும் நிலைபெற
தென் கோவிடம் நன்றே பெறக்
கொண்டாள் பதி அன்பானவள்
சகலர்புகழ் சரித்ர சாவித்ரியொடு பத்தினிப் (பூ)

(7) ராஜ குரு கேதாரம்.

பல்லவி

மறுமுறை நீ அந்த வார்த்தையைச்
சொல்லாதே மகா பாபமே (மறு)

அனுபல்லவி

பிறவியிலே குலபேதமும் யேது
பெண்களை குறை சொல்லுவது—பெருந்தீது
அறநெறி யதற்கிது அணுவுந்தகாது
அரிஹரி யென திரு செவி கேளாது (மறு)

(8) ராஜ குரு

கலையிலும் அழகிலும் வென்றாள் அந்த
கண்ணனுக்கே அடிமையென்றாள்

விலை வாழ்வினையற்று மிதித்தாள், ஒரு
வேந்தனைத் துரும்பென மதித்தாள் (க)

(9) கிருஷ்ணன் நவரஸகன்னடா-ஆதி

பல்லவி

பெண்ணுலகிலே பெருமை கொண்டாள்-தாசி
தன்மகளாம் எழில் மின்னாள்—இன்ப (பெ)

அனுபல்லவி

பொன் பொருள்தான் வேண்டும்
அன்னைசொல் கேளாதாள்
புவியாளும் மகாராஜன் தனைவேண்டே னென்றாள் (பெ)

சரணம்

கலைமகளாம் அந்தக்காரிகையாள் நடன (க) இந்த (க)
கண்ணனென்மேல் பக்தி காதல் கொண்டாள்
உலகாசையகலாத வடிவுற்ற தவஞானி
ஓது பதேசம் உணராமல்
எனைநாடும் ஒருமாது (பெ)

(10) ராஜகுரு

சாரசம்............
வசீகரக் கண்கள் சீர்தரும்
முகம் சந்த்ர பிம்பம் (சாரசம்)

மனோகர ஓவியப் பெண்ணாள்
வாய்த்தால் பேரின்பம் ஸ்வாரஸ்யம் (வசீகர)

ஆடும் மயிலாள் அபிநய மொழியாள் இவள்
அன்பை நாடும் புவிமையலால்
ஈடில்லா தேவகுமாரி சிங்காரி மிகும்
இகாதி சுகரசவாரி (சாரசம்)

(11) ராஜ குரு

பேச வெட்கம் ஏனோ
பெண்ணே உன் வாய் திறந்து (பேச)

(12) ராஜ குரு நாமாவளி.

கலைமகள் தேவகுமாரி—வெண்
மலர்மகள் திருவுருமாரி வந்த (கலை)
ஜெபதபப் பூஜையிலே வேண்டி நான்
தேடும் தெய்வ மாலே
திகழ்பெறும் மாதுபோலே
தெரிகிறாள் கண்முன்னாலே

தெரிசனமே
கண்டேன் தினமே
பொறு மனமே
இனிமேலிவளே உனதாம் நடமிடு (கலை)

கலைமகள் தேவகுமாரி வெண்
மலர்மகள் வளர்கிரிதாரி இன்பக்
கலைமகள் தேவமுராரி

தீனதயாளா கோபாலா
தேவகி பாலா கோபாலா
கானலோலா கோபாலா
கனகாம்பரதா கோபாலா
கேசவமாதவ கோபாலா
கிருஷ்ணஅரிஹரி கோபாலா
வாசுதேவா கோபாலா
வைகுந்தவாசா கோபாலா

தீனதயாளா
தேவகி பாலா
கேசவமாதவ
கிருஷ்ண அரிஹரி
அரிஹரி, அரிஹரி, அரிஹரி, அரிஹரி
ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம்

(13) நாரதர் கரஹரப்ரியா—ஆதி.

பல்லவி

ஆட்டமென்ன சொல்லுவேன்—ஆடும்
அம்புவி வாழ்வை
நம்பிய மாந்தர்—ஆடும் (ஆ)

அனுபல்லவி

ஆட்டத்திலும் பொருள்யீட்டத்திலும் பெண்களின்
நாட்டங்கொண்டார் சுத்தஞானியைப் போலாடும் (ஆ)

சரணம்

பார்தனிலே தர்ம நேர்மையில்லாமலே
பசுத்தோல் போத்திய புலியதுபோலே
ஆர்வமெல்லாம் மூவாசையின்மேலே
அகமொன்று புறமொன்று நினைத்தும் தன்னாலே
கார்முகிலாம் கண்ணன் நாமம் யெண்ணாமலே
கண்டது காக்ஷியென அவரவர்கள்
கொண்டது கொள்கையெனும் குணமுடையவர்கள் (ஆ)

(14) கோரஸ்

பூஜிதமான மெய்ஞ்ஞானம்—குரு
ராஜ மகா சந்நிதானம் (பூஜி)
வாசுதேவ விசுவாச மனம் மக
ராஜ ராஜர் பணி தேவஇனம் (குரு)
ராஜமகா சந்நிதானம் (பூஜி)
சேவடி காண்மனே வாழ்வுரும் க்ஷேமம்
தேவகுமாரியும் நாமும்
சீர்பெறவே நல்லோர் வரவே (குரு)
ராஜமகா சந்நிதானம் (பூஜி)

(15) கச்சேரி — சரஸ்வதி மனோஹரி—ஆதி.

பல்லவி

எந்தவேடு கொந்து ராகவா
பந்தம்யாலரா ஓராகவா (எ)

அனுபல்லவி

சிந்த தீர்சுடகெம்த மோடிரா
அந்தராத்மனு செம்தரானுனே (எ)

சரணம்

சித்த மந்து நின்னு ஜூசி சௌக்கியமே
உத்தமம் பனுசு நுப்பொங்குசுனு

ஸத்த மாத்ரமா ஸாலநம்மிதி
ஸார்வ பௌம ஸ்ரீ த்யாகராஜனுத (எ)

(16) நடனம் தில்லானு

(17) கோரஸ்

முரளீ கான மோகனு
அன்பான கண்ணு வா
கருணைக்கடல் வான
வண்ணு ஞானக்கண்ணு வா (மு)

முதற்பகுதிப் பெண்கள்:

திருவடி தெரிசனம்
ஜென்ம சாபல்யம்
பெறவும் எங்கள் மீது
பிரியம் கொண்ட பேராளா

பிற்பகுதிப் பெண்கள்:

புதிய நிலாவிலே
பூத்த மலர்க்காவிலே
இதமிகும் இன்பம் காண
இன்னுள் மிகவும் நன்னுளே
முரளீ கான மோகனு
அன்பான கண்ணு வா!

ராஜ குரு

சரச மனோரத
சந்தோஷங் கொண்டாடும்
தருணியரே இன்பம்
தந்திடுவேன் அன்போடு
உறவு கொண்டாட வாரீர்
ஒன்ருய் இன்றே என்னேடு

பெண்கள்:

மதன கோபால மாலே
மாலாகினேம்
மழையின் புயல்காணும்
மயிலே யாமாகினேம்—

ராஜ குரு

இனிய ராதையான கனியே யென்
கண்ணே வா
வனசமலர் மேவும் பொன்னே வானின்
மின்னே வா
இனிய ராதையான கனியே யென்
கண்ணே வா!

(18) டான்ஸ் பாட்டு — இராகம் : பிலகரி

கனவில் கண்டேனே கண்ணன் மேல்
காதல் கொண்டேனே நான் (கனவில்)
நினைவில் நின்றானே எனது (நி)
முத்தமிட
நெருங்கி வந்தானே
எனை மறந்தேனே நான் (எனை)
சொல்லாத
இன்பமடைந்தேனே (கனவில்)

மண மலராலே அமைத்த
அணையதன் மேலே திரு (மண)
கணவனைப் போலே கருணை (கண)
காட்டியே மையல் மூட்டினானே (கனவில்)

(19) பிச்சைக்காரன்

எதுவேண்டும் சொல்மனமே (எ)
மதிவேண்டுமென்கிற நித்யமா—அல்லது
மனம் வேண்டுகின்ற அநித்யமா—இதில் (எ)
தீயிலிட்டபோதும் தீய்ந்திடாத தேகம்
வேண்டுமா—அல்லது

ஈயெறும்பு மொய்த்து இனிமை காணும்
தேகம் வேண்டுமா
இன்பம் வேண்டுமா
துன்பம் வேண்டுமா—இதில் (எ)

பெரியோர்கள் சகவாசமா—பேதைப்
பெண்ணூர்கள் விசுவாசமா—உயர்
குருஞான உபதேசமா நெஞ்சுக்
குருடாக உத்தேசமா

பதிநேசமா அல்லது
பகல்வேஷமா பரம (பதி)
நேசமா மோசமா இதில் (எ)

அழியாததா அல்லது அழிவுற்றதா
விளையாததா தரையில் விளையுற்றதா
இதா அதா இதில் (எ)

(20) **சத்யபாமா** இராகமாலிகை ஜோன்புரி.

கண்ணன் வருவாரோடி மலர்க் (க)
கமலக் (க)

வேணு கானன் என் பிராணன் அன்பான
காதலன் எந்தன் (க)

காம்போதி.

நீராடும் மடுவினில்
போராடி மங்கையர்கள்
சீராட அணிதரும்
சேலை ஒளித்த ஜாலக் (க)

அடாணு.

கோகுலம் வாழ் ஜெகன் மோகன ரூபனை
கோபியர் யாரும் கைக்கொண்டாரோ
நாகனின் மீது முன்னுளில் ஆடிய
நாதனை எந்தன் ஞானக் (க)

மாண்டு.

ஒருநாள் ஒருபோதும் கண்ணுளனைப்
பிரியாவரம் கேழ்ப்பேன் வந்தால் நான் (ஒ)

காவைகள் யாவும் கன்றுகளோடு
இரவுகண்டே இல்லம் சேருமிந் நேரம் (க)

(21) ராஜகுரு

எல்லோரும் நல்லவரே உலகினில் (எல்)

கற்றும் அறி
வில்லாதான் என்னிலுமே கல்லாதவர் (எல்)

உலகோரை மேலேற்றும் அருள் ஞானி நான்
இவ் (வுலகோரை) தானோர்
முழமேற முடியாத பரண் ஏணி நான்
பலகாலம் பயனற்றுப் போனேனே
பக்தி காணேனே
பாவி யானேனே என்னில் (எல்)

முற்பகலில் செய்ததெல்லாம்
பிற்பகலில் விளையுமென்ற மொழியின் உண்மை
அற்பகுணம் படைத்தவன் யான்
அறிந்து கொண்டேன்—என்
குற்றமதை நண்குணர்ந்தேன்
குவலயத்தில் பழிசுமந்தேன்-என்னில் (எல்)

வாசகம் செயலிலும் மாறுபாடுற்ற பாவி
மா பாவி யானன்றி மற்றுமோர் பாவியேது
ஈசனை நினைக்கின்ற எண்ணம் தளர்ந்த பாவி
ஏனெடுத்தேன் இந்த மானிட ஜென்மம் பாவி
என்னில் (எல்)

(22) வேவுகாரர்

சங்கர சங்கர சம்போ—இந்த
சாமியார் விஷயத்தில் ஏனிந்த வம்போ
தாய் வயிற்றில் பத்துமாதம்—சிறை
தானிருந்தார்க்கிது என்ன ப்ரமாதம்— (ச)

கடன்காரர் காணுதயிடமே—(இதுகடன்)—மனதை
கலக்கித் தெளியவைக்கும் கம்பிசூழ் மடமே (கடன்)
பேதமிங்கே கிடையாது (ஜாதி பேத)
ஆசை பெண்ணெனும் பேயுன்னை பிடிச்சிழுக்காது (ச)

(23) வேவுகாரர்மனைவி

அழகினால் வருவது ஆபத்து
அவசியம் தப்பாது எப்போதும் (அழ)
பழய கதைகளைப் புரட்டிப்பார் அலது
படிச்சவங்களைக் கேட்டுப்பாரு உடல் (அழ)
கொலைகள் நடப்பதும் குணத்தைக் கெடுப்பதும்
கும்பலான பெருங் குடும்பம் பிரிவதும்
குலம் விட்டுக் குலத்திலே கொண்டுங் கொடுப்பதும்
கூறு கெட்டு மதம் மாறிக் கொள்வதும் (அழ)
நல்லாயிருந்த அகலிகை உடல் கருங்
கல்லாப் போனதும் எதிலே அழகதிலே
நாளும் வளர்ந்தும் குறைந்தும் சந்திரன்
நலிஞ்சு போனதும் எதிலே அதும் அதிலே

சிவன்

வில்லோடு பிறந்த சீதை யாருக்கு
விசனம் வந்ததும் எதிலே அதும் அதிலே

வடி

வேலனுருங் குற வேடந்தாங்கி மர
வேங்கையானது எதிலே அதும் அதிலே
இல்லாளிருக்கையில் இரண்டாந்தாரம்
ஏற்பட நினைப்பதும் ஆப்பட்டு முழிப்பதும் (அழ)

(24) தேவகுமாரி

என்ன வாழ்வென் வாழ்வு
இந்தத் தேகம் தந்த தாழ்வு (எ)
கன்னியா மென் மாட்சி கொடும்
காமுகர் கண் காட்சி (எ)
பொன்னை வேண்டுவேனோ அதற்
கென்னை நான் விற்பேனோ
புண்யம் தேடுவேனோ பிறர்
போதனை கேழ்ப்பேனோ (எ)

ஈசனின் விஸ்வாசி
தாசியாம் நிர்த்தோஷி
ஆசையாகப் பேசி—புவி
எசவாழ்தல் சீச்சி

சுபம். சுபம். சுபம்.

'கிருஷ்ணபக்தி' யில் நடிக்கும் M. K. சரோஜா & C. R. ராஜகுமாரி.

எதிர்பாருங்கள்!

எமது

அடுத்த படம்



கிருஷ்ணா பிக்சர்ஸ்

தியாகராயநகர் :: சென்னை.

Printed by M. G. B. Naidu & Sons, Madras 2—1,00,000 Copies.